## அக்டோபர் – 06 – வெள்ளி

புனித புரூனோ

"உங்களுக்கு செவிசாய்ப்பவர் எனக்கு செவிசாய்க்கிறார்"

### முதல் வாசகம் : பாரூக் 1 : 15 – 22

"அப்பொழுது நீங்கள் சொல்ல வேண்டியது நம் கடவுளாகிய ஆண்டவருக்கு நீதி உரியது. ஆனால் நமக்கும், யூதாவின் மக்கள், எருசலேமின் குடிகள், நம் அரசர்கள், தலைவர்கள், குருக்கள், இறைவாக்கினர்கள், மூதாதையர்கள் ஆகிய அனைவருக்கும் இன்றுபோலத் தலைக்குனிவுதான் உரியது. ஏனெனில், ஆண்டவர் முன்னிலையில் நாம் பாவம் செய்தோம். நம் கடவுளாகிய ஆண்டவருக்கு நாம் கீழ்ப்படியவில்லை அவரது குரலுக்குச் செவிசாய்க்கவில்லை அவர் நமக்குக் கொடுத்த கட்டளைகளின்படி நடக்கவுமில்லை.நம் கடவுளாகிய ஆண்டவர் நம் மூதாதையரை எகிப்து நாட்டிலிருந்து அழைத்து வந்த நாளிலிருந்து இன்று வரை நாம் அவருக்குப் பணிந்து நடக்கவில்லை அவரது குரலுக்குச் செவிசாய்ப்பதில் ஈடுபாடு கொள்ளாமல் இருந்துவிட்டோம். ஆகவேதான், பாலும் தேனும் வழிந்தோடும் நாட்டை நமக்குக் கொடுக்கும்பொருட்டு,எகிப்து நாட்டிலிருந்து நம் மூதாதையரை ஆண்டவர் அழைத்து வந்த பொழுது, தம் அடியாரான மோசே வாயிலாக அவர் அறிவித்திருந்த கேடுகளும் சாபங்களும் இன்றுவரை நம்மைத் தொற்றிக் கொண்டுள்ளன.மேலும், நம் கடவுளாகிய ஆண்டவர் நம்மிடம் அனுப்பி வைத்த இறைவாக்கினர் வாயிலாகப் பேசிய சொற்கள் எவற்றுக்கும் நாம் செவிசாய்க்கவில்லை.மாறாக, நம்மில் ஒவ்வொருவரும் நம் தீய உள்ளத்தின் போக்கில் நடந்தோம் வேற்றுத் தெய்வங்களுக்கு ஊழியம் செய்தோம் நம் கடவுளாகிய ஆண்டவர் முன்னிலையில் தீயன புரிந்தோம்."

**பதில்பாடல் :** உமது பெயரின் மாட்சியை முன்னிட்டு

கடவுளே எங்களை விடுவியும்

### நற்செய்தி : லூக்கா 10 : 13 - 16

அக்காலத்தில்இயேசு கூறியதாவது : "கொராசின் நகரே, ஐயோ! உனக்குக் கேடு! பெத்சாய்தா நகரே, ஐயோ! உனக்குக் கேடு! ஏனெனில் உங்களிடையே செய்யப்பட்ட வல்ல செயல்கள் தீர், சீதோன் நகரங்களில் செய்யப்பட்டிருந்தால், அங்குள்ள மக்கள் முன்பே சாக்கு உடை உடுத்திச் சாம்பலில் உட்கார்ந்து, மனம் மாறியிருப்பர்.எனினும் தீர்ப்பு நாளில் தீருக்கும் சீதோனுக்கும் கிடைக்கும் தண்டனையைவிட உங்களுக்குக் கிடைக்கும் தண்டனை கடினமாகவே இருக்கும்.கப்பர்நாகுமே, நீ வானளாவ உயர்த்தப்படுவாயோ? இல்லை, பாதாளம்வரை தாழ்த்தப்படுவாய். "உங்களுக்குச் செவி சாய்ப்பவர் எனக்குச் செவிசாய்க்கிறார் உங்களைப் புறக்கணிப்பவர் என்னைப் புறக்கணிக்கிறார். என்னைப் புறக்கணிப்பவர் என்னை அனுப்பினவரையே புறக்கணிக்கிறார்" என்றார்.

**தியானம்:** படைப்புகளுள் சிறந்த படைப்பாக கடவுள் மனிதனைப் படைத்தார். எனவேதான் கடவுள் மனிதனுக்கென்று சிறப்பான சலுகைகளை பரிசாகக் கொடுத்தார். "அவர்களைக் கடவுளாகிய உமக்குச் சற்றே சிறியவராக்கியுள்ளீர். மாட்சியையும் மேன்மையையும் அவர்களுக்கு முடியாகச் சூட்டியுள்ளீர். உமது கை படைத்தவற்றை அவர்கள் ஆளும்படிச் செய்துள்ளீர். எல்லாவற்றையும் அவர்கள் ஆளும்படிச் செய்துள்ளீர். எல்லாவற்றையும் அவர்கள் பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தியுள்ளீர்." (திபா 8:5-6) ஆனால் மனிதனோ கடவுள் எந்த அளவுக்கு அவனை அன்பு செய்தாரோ அந்த அளவுக்கு அவன் கடவுளை விட்டு தூர விலகிச் சென்றான் என்பதை எரேமியா இறைவாக்கினர் பின்வருமாறு கூறுகின்றார், "என் மக்கள் அறிவிலிகள், என்னை அவர்கள் அறிந்து கொள்ளவில்லை, மதிகெட்ட மக்கள் உய்த்துணரும் ஆற்றல் அவர்களுக்கில்லை, தீமை செய்வதில் அவர்கள் வல்லவர்கள், நன்மை செய்ய அவர்களுக்குத் தெரிவதில்லை. (எரே.4:22) எனவேதான் ஆண்டவர் இயேசுவும் கூறினார், எருசலேமே! எருசலேமே! கோழி தன் குஞ்சுகளைத் தன் இறக்கைகளுக்குள் கூட்டிச் சேர்ப்பது போல நானும் உம் மக்களை அரவணைத்துக் கொள்ள எத்தனையோ முறை விரும்பினேன். உனக்கு விருப்பமில்லையோ? (மத்.23:37) என்று மனம் நொந்து அழுதார். மண்ணுலகில் மனிதர்கள் செய்யும் தீமை பெருகுவதையும் அவர்களின் இதயச் சிந்தனைகளெல்லாம் நாள் முழுவதும் தீமையை உருவாக்குவதையும் ஆண்டவர் கண்டார். மண்ணுலகில் மனிதரை உருவாக்கியதற்காக ஆண்டவர் மனம் வருந்தினார். தொ.நூ.6:5-6 இன்று நம்முடைய சொல், செயல், சிந்தனை இறைவனை மகிழ்விக்கின்றதா? இல்லை இறைவனின் இதயத்தை குத்திக் கிழிக்கின்றதா? என்பதைச் சிந்திப்போம். "கடவுள் உங்களை விலைகொடுத்து மீட்டுள்ளார் எனவே உங்கள் உடலால் கடவுளுக்கு பெருமை சேருங்கள்." (1கொரி.6:20) "நீங்கள் தந்தையே என அழைத்து மன்றாடுபவர் ஆளைப் பார்த்தல்ல அவரவர் செயல்களின்படியே தீர்ப்பு வழங்குகின்றார். ஆகையால் இவ்வுலகில் நீங்கள் அன்னியராய் வாழும் காலமெல்லாம் அவருக்கு அஞ்சி வாழுங்கள். உங்கள் மூதாதையரிடமிருந்து வழிவழியாய் வந்த வீணான நடத்தையினின்று உங்களை விடுவித்துக் கொள்ளுங்கள்" (1 பேது 1:17-18) என்று அழைப்பு விடுக்கும் தூய பேதுருவின் வார்த்தைகளுக்கு ஏற்ப கடவுளுக்கு அஞ்சி வாழுவோம்